**நிவித்திகல பிரதேச சபை**

**இரத்தினபுரி மாவட்டம்**

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 18 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 11 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிவித்திகல பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய முத்திரைக் கட்டண வருமானம் குறிப்பாக இனங்காணப்படாமல் 2012 சனவரி முதல் 2015 ஆகஸ்ட் வரையான காலப்பகுதிக்காக கிடைக்க வேண்டிய ரூபா 6,854,500 தொகையான முத்திரைக் கட்டண வருமானம் மீளாய்வாண்டின் முத்திரைக் கட்டண வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கைத்தொழில் வரி மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணங்களில் மீளாய்வாண்டிற்குரிய சிட்டையிடப்பட்ட வருமானத்தை இனங்காணாமல் ஆண்டின் போது கிடைத்த ரூபா 1,065,869 தொகையான வருமானம் ஆண்டின் சீட்டையிடப்பட்ட வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) சம்பள மீளளிப்பு பதிவேட்டின் பிரகாரம் 2016 திசெம்பர் மாதத்திற்கான மீளளிப்புச் செய்ய வேண்டிய மொத்த சம்பளம் ரூபா 1,710,614 ஆக இருந்த போதிலும், அது ரூபா 1,805,614 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 95,000 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது நன்கொடையாகக் கிடைத்த ரூபா 32,125 தொகையான நூலகப் புத்தகங்கள் மூலதனத்திற்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மூலம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 32,740 தொகையான 17 நுகர்வுப் பொருட்கள் நிலையான சொத்தாகக் கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக நிலையான சொத்துக்கள் அப்பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2016 இன் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் ரூபா 480,850 கூட்டுத்தொகையான சொத்துக்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்கோ அல்லது அழிப்பதற்கோ சிபாரிசு செய்யப்பட்டிருந்த போதிலும், ஏலத்தில் விற்பனை செய்யப்படாமல் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

(எ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிநிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காணி மற்றும் கட்டிடங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 06 கணக்கு விடயங்களில் மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும் பட்டோலைகளின் படியான மீதிக்கும் இடையே ரூபா 16,668,150 கூட்டுத் தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) 15 செலவின விடயங்களின் செலவினப் பேரேட்டிற்கும் நிதிக்கூற்றுக்களுக்குமிடையே ரூபா 1,430,410 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய கணக்குகள்

சபையின் ஊழியர் கடன் பதிவேட்டின் பிரகாரம் 2007 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 19,017 தொகையான ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்

கீழே குறிப்பிடப்படுகின்ற சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>நிதிப்பிரமாணம் 1645 | மீளாய்வாண்டிற்குரிய ஓட்ட அட்டவணை 2017 யூன் வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | சபையின் வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,434,016 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,278,963 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவில் ரூபா 4,155,053 அதிகரிப்பொன்று காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகள் ரூபா 4,155,053 இனால் அதிகரித்தமை தொடர்பில் 04 விடயங்களின் வருமானம் ரூபா 3,506,919 இனால் அதிகரித்தமை மற்றும் 02 செலவின விடயங்களில் ரூபா 2,251,971 தொகை குறைவடைந்தமை என்பன பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **வருமான விடயம்** | **மதிப்பிடப்பட்ட** | **உள்ளபடியான** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை** |
|---|---|---|---|
| | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** |
| வீதவரியும் வரியும் | 2,525 | 2,847 | 1,518 |

| | | | |
|---|---|---|---|
| வாடகை | 4,076 | 3,882 | 62 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 273 | 335 | 01 |
| ஏனைய வருமானம் | 37,246 | 31,391 | 11,199 |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடும் போது ஆதனவரி, அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் சேவைகளுக்கான கட்டணம் என்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட அளவினைவிட முறையே 32 சதவீதம், 23 சதவீதம் மற்றும் 79 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் பிடியாணைக் கட்டணமும் தண்டப்பணமும், ஏனைய வருமானங்கள் மற்றும் அரசாங்கத்தின் பங்களிப்பு போன்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதிடப்பட்ட அளவினை விட முறையே 64 சதவீதம், 27 சதவீதம், மற்றும் 23 சதவீதம் என்ற வீதத்தால் குறைவடைந்திருந்தன.

### 2.3.3 ஆதனவரி

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 958 ஆதனவரி அலகுகளின் கூட்டுமொத்தமாக ரூபா 1,189,289 நிலுவை ஆதனவரி மீதியொன்று காணப்பட்டதுடன் 2017 பெப்ரவரி 07 ஆந் திகதி வரையிலும் அந்த நிலுவைப் பணத்திலிருந்து எத்தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 ஏனைய வருமானம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் IV(ஆ) பகுதியின் 39 ஆம் இலக்கத்தின் கீழ் காண்பிக்கப்பட்ட 2 ஆவது உபவிதியின் பிரகாரம் அறிவித்தல்களைக் காட்சிப்படுத்தும் போது விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளாமல் கட்டணம் அறவிடப்பட்டிருந்ததுடன் சபை அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்ற விளம்பர அறிவித்தல்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொண்டு உரிய வருமானங்களை சபைக்கு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஏக்கர் வரி பதிவேட்டின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 257 ஏக்கர் வரி அலகுகளிலிருந்து கூட்டுமொத்தமாக ரூபா 167,553 நிலுவை ஏக்கர் வரி மீதியொன்று காணப்பட்டதுடன் அது சபை அதிகாரப் பிரதேசத்திலுள்ள மொத்த ஏக்கர் வரி அலகுகளின் எண்ணிக்கையில் 81 சதவீதத்தைக் கொண்டிருந்தது.

(இ) நிவித்திகல நகரத்தில் நிறுத்தி வைக்கப்படுகின்ற மோட்டார் வாகனங்களிலிருந்து கட்டணங்களை அறவிடுவதற்காக சபையினால் மோட்டார் வாகன உதவியாளர் தரகு அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்காக வாகனம் நிறுத்தி வைத்தல் கட்டணமாக ரூபா 31,000 மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது. சேகரிக்கப்படுகின்ற பணத்தில் 70 சதவீதத்திற்குச் சமமான தரகுப் பணம் அந்த உதவியாளருக்குச் செலுத்தப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் தேறிய வருமானமாக ரூபா 9,300 மாத்திரம் சபை நிதியத்திற்கு சேர்க்கப்பட்டிருந்தது. மேலும் கட்டணம் அறவிடும் பணிகள் முறையான பிரகாரம் மேற்கொள்ளப்படாதிருந்தமை கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பகிரங்கப்படுத்தப்பட்ட 1986 இன் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டங்கள் மற்றும் கட்டிட கட்டளைகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் V ஆவது பட்டோலையின் பிரகாரம் தொலைபேசி பரிவர்த்தனைக் கோபுரங்களை நிர்மாணிக்கும் போது அறவிடவேண்டிய கட்டணங்களுக்கு முரணானதாக 06 தொலைபேசி கோபுரங்களிலிருந்து குறைவாக கட்டணம் அறவிடப்பட்டமையாலும், 03 தொலைபேசி கோபுரங்களிலிருந்து எந்தக் கட்டணமும் அறவிடப்படாமையின் காரணமாகவும் சபை நிதியத்தில் ரூபா 1,201,200 தொகை இழக்கப்பட்டிருந்தது.

(உ) 1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க அதிகாரச் சட்டங்களிலிருந்து திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்களுக்கு இணங்க 2008 சனவரி 25 ஆந் திகதிய 1523/16 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் ‘‘இ’’ பகுதியில் குறித்த செயற்திட்டம் தொடர்பாக சபையினால் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட வேண்டிய போதிலும், சபையினால் 2016 ஆம் ஆண்டிற்காக 03 சுற்றாடல் அனுமதிப்பத்திரம் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற

சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய வியாபார நிலையங்கள் தொடர்பாக 2017 பெப்ரவரி 07 ஆந் திகதி வரையிலும் மெய்மையாய்வொன்று மேற்கொள்வதற்கு தவறியிருந்தது.

(ஊ) சபை அதிகாரப் பிரதேசத்தில் நடாத்தப்படுகின்ற கண்காட்சிகளுக்காக சபையினால் களியாட்ட வரி அறவிட வேண்டியிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டின் போது சபையினால் எந்தவொரு களியாட்ட வரி வருமானமும் உழைக்கப்படாதிருந்ததுடன் களியாட்ட வரி தொடர்பாக 2016 ஆம் ஆண்டில் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பகிரங்கப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------------

### 3.1 செயலாற்றல்

---------------------------------------

மீளாய்வாண்டின் பாதீட்டின் பிரகாரம் சபை நிதியத்தின் கீழ் 02 மூலதன செயற்திட்டங்களுக்காக ரூபா 500,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் சபை நிதியம், மாகாண சபை நிதியம் மற்றும் ஏனைய நிதியுதவியின் கீழ் ரூபா 39,703,535 தொகை செலவில் 91 அபிவிருத்தி செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தன.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

-------------------------------------------------------------------

2015 ஆம் ஆண்டில் நிலுவை ஆதனவரியை அறவிடல் மற்றும் சொத்துக்களைத் தடை செய்யும் நடவடிக்கைகளுக்காக 15 சதவீத தரகின் அடிப்படையில் சொத்துக்களைத் தடை செய்யும் உத்தியோகத்தர்களின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு உள்ளூராட்சி ஆணையாளரினால் 2016 மார்ச் மாதத்தின் போது கடிதமொன்றின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த தரகு செலுத்தும் போது ரூபா 60,120 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

-----------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்பட்ட 03 விளையாட்டு மைதானங்களில் இரண்டினது அளத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு சபைக்கு கையளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்பட்ட 75 மயான நிலங்களை அளக்கும் நடவடிக்கைகள் மேற்கொண்டு சபைக்கு கையேற்பதற்கு 2017 பெப்ரவரி 07 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பொலிஸ் முறைப்பாட்டுக் குறிப்பின் படி 2016 யூலை 04 ஆன ஞாயிறு தினமொன்றில் சபையின் கெப் வண்டியின் மின்சார முறைமைக்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாக காப்புறுதி நலனைக் கோரும் போது விபத்து ஏற்பட்ட திகதியான 2016 யூலை 03 ஆந் திகதியாகக் காண்பித்தமை, விபத்துத் தொடர்பாக உறுதிப்படுத்தும் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஓட்ட அட்டவணை மற்றும் வெளிச்செல்லல் பதிவேடு என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை, விபத்து ஏற்பட்ட தினத்தில் வெளிக்கள கடமைகளில் எவ்வித வருமானமும் உழைக்கப்படாமை மற்றும் 2017 யூன் வரையில் இந்த கெப் வண்டி பழுதுபார்க்கப்படாமல் சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை போன்ற காரணங்களினால் இந்த விபத்து ஏற்பட்ட தினத்தில் கெப் வண்டி என்பன கடமைகளுக்காக பயன்படுத்தப்பட்டது என்பது பிரச்சினைக்குரியதாக இருந்தது.

## 3.4 ஒப்பந்த நிர்வாகம்

---------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் நேர் ஊழிய அடிப்படையின் கீழ் ரூபா 331,492 செலவில் 2016 திசெம்பர் 20 ஆந் திகதி பூர்த்திசெய்யப்பட்டிருந்த பொதுச் சந்தைத் தொகுதியின் மலசலகூடத்தை திருத்தியமைப்பதற்காக 325 சுவர் ஓடுகள் (டைல்) கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த மொத்த டைல் அளவும் விநியோகிக்கப்பட்டதாக இருப்புப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2017 ஏப்ரல் 06 ஆந் திகதி கணக்காய்வினால் மேற்கொண்ட பௌதீகப் பரிசோதனையின் பிரகாரம் இந்த வேலைக்காக 200 சுவர் டைல் மாத்திரம்

பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், களஞ்சியத்தில் 87 சுவர் டைல் காணப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 13,727 தொகையான 38 சுவர் டைல் தொடர்பாக விளக்கமான பதிலொன்றை வழங்குவதற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர் தவறியிருந்தார். மேலும் மலசல கூடத்திற்காக மின்சாரத்தை வழங்குவதற்காக மதிப்பீடு தயாரிக்கப்படாதிருந்ததுடன் ஆண், பெண் இருபாலாருக்காக தனித்தனியாக பயன்படுத்தக்கூடிய வகையில் நிர்மாணிக்கப்பட்டிக்கவில்லை.

(ஆ) கறவிட்ட நீர் செயற்திட்டத்தின் நீர்த்தேக்கத்தை வனவிலங்குகளின் செயற்பாடுகளிலிருந்து பாதுகாத்தல், நீர்த் தேக்கத்தின் சுத்தத்தைப் பேணுதல் மற்றும் நீர்த்தேக்கத்தில் இடையூறுகள் ஏற்படுவதைத் தடுப்பதற்காக கூட்டுமொத்தமாக ரூபா 369,908 செலவில் கறவிட்ட நீர் உத்தேசத்திட்டத்தின் ஒதுக்கல் பிரதேசத்தைச் சுற்றி 720 அடி நீளத்தில் பாதுகாப்பு வேலி நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் பாதுகாப்பு வேலியில் 10 அடி அளவில் நிர்மாணிக்கப்படாதிருந்தமையின் காரணமாக எதிர்பார்த்த நோக்கம் உரிய வகையில் நிறைவேற்றப்படாதிருந்தமை 2017 ஏப்ரல் 06 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) மாகாண சபையின் நிதிஏற்பாட்டின் அடிப்படையில் முன்னைய ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட வேலைகளுக்காக செலுத்தப்பட்ட ரூபா 200,000 முற்பணம் 2017 பெப்ரவரி 03 ஆந் திகதி வரையில் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126(ix)(ஆ) பிரிவின் பிரகாரம் மலம் அகற்றல் மற்றும் கழிவுப்பொருள் அகற்றுதல் மற்றும் அதற்கான கட்டணம் அறவிடல் என்பன உப விதிகளுக்குரிய விடயமொன்றாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இலங்கை சனநாயக கோசலிசக் குடியரசின் 1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் IV(ஆ) பகுதியின் 9.4 ஆவது உப விதியின் பிரகாரம் வறுமையைக் காரணமாகக் கொண்டு சபையினால் விடுவிப்புச் செய்யப்பட்ட குடியிருப்பாளர் அல்லாத, கழிவுப் பொருள் சேவை மூலம் சேவை வழங்கப்படுகின்ற ஏதாவது இடமொன்றின் குடியிருப்பாளர்களினால் சபை அதற்காக தீர்மானித்த கழிவுப் பொருள் அகற்றல் கட்டணமொன்றை சபைக்கு மாதாந்தம் செலுத்த வேண்டியிருந்தது. எனினும், சபையினால் கழிவுப்பொருள் அகற்றுதல் தொடர்பாக கட்டணம் அறவிடுவதற்காக உப

விதியொன்றை விதிப்பதற்கு 2017 பெப்ரவரி 07 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீட்டில் 10 செலவின விடயங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 165,800 கூட்டுத்தொகையான மொத்த நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

### 4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்காக சபையினால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.

### 4.3 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டம் 2016 செப்தெம்பர் 21 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

### 4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவை ஸ்தாபித்து அமுல்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.5 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிற்காக உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.6 தீர்க்கப்படாதுள்ள மற்றும் பதிலளிக்கப்படாதுள்ள கணக்காய்வு ஐயவினா

2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கணிப்பீடு செய்யக்கூடிய ரூபா 741,465 பெறுமதியான 01 கணக்காய்வு ஐயவினாவிற்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---

கீழே குறிப்பிடப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் வேண்டப்படுகின்றது.

| முறைமைகள் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | (i) அதிகரித்து பதிதல் |
| | (ii) வகைப்படுத்தல் வழு |
| | (iii) கணக்குகளிலிருந்து கைவிடல் |
| | (iv) இணங்காமைகள் |
| (ஆ) வருமான நிர்வாகம் | நிர்ணயிக்கப்பட்ட வருமானம் இனங்காணப்படாமை |
| (இ) கழிவுப்பொருள் முகாமைத்துவம் | கட்டணம் அறவிடப்படாமை. |